# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282

மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 37 /2022** **நாள்: 10.02.2022**

### நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளுக்கு 19.02.2022 அன்று பொது விடுமுறை

அனைத்து மாவட்டங்களுக்கு உட்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெற உள்ளதால், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளுக்கு 19.02.2022 அன்று பொது விடுமுறை அளித்திட உரிய ஆணைகள் வெளியிட அரசை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டதன்படி, அரசாணை எண்.27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 09.02.2022-ல் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளுக்கு 19.02.2022 அன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டு அரசு உத்திரவிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், கடம்பூர் முதல்நிலை பேரூராட்சியில் தேர்தல் மாநில தேர்தல் ஆணையத்தால் இரத்து செய்யப்பட்டுள்ளதால் அப்பகுதிக்கு இந்த பொது விடுமுறை பொருந்தாது என தெரிவிக்கப்படுகிறது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

10/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்